2019 ஜூலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

90—

பேருந்து வசதி

***4647—திரு. அ. சண்முகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதி, காந்திபுரம் முதல் தொப்பம்பாளையம் வரை புதிய வழித் தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் மண்டலம் மூலமாக காந்திபுரத்திலிருந்து தொப்பம்பாளையம் வரை ஒரு நகரப் பேருந்துமூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம் அவர்கள்.

திரு. அ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், துணை முதல்வர் அவர்களையும் வணங்கி, என்னுடைய மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஓர் ஆண்டுக்கு முன்பாக நான் வைத்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டதற்கு மாண்புமிகு அமைச்சர்

அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று மாற்றுவழியாக ஈச்சநாரி, மதமரச்சன்பட்டி, ஒத்தக்கால் மண்டபம், மாம்புலி வழியாக ஒரு புதிய வழித் தடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கிக் கொடுப்பாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற அந்த வழித் தடத்தை துறை அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, தேவையிருக்குமாயின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று அந்த வழித் தடத்தில் பேருந்து இயக்குவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம் அவர்கள்.

திரு. அ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு கேரள மாநில எல்லையான வாளையாறு காக்காசாவடி வழியாக மதுக்கரை, கோவைப்புதூர், பேரூர் வழியாக மருதமலை முருகன் கோயிலுக்கு ஒரு வழித்தடம் புதிதாக வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தேன். அந்த வழித்தடத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து செய்து தரவேண்டுமாய் கேட்டு, மாம்புலி வழியாக ஒரு பேருந்து வசதி அளித்ததற்கு நன்றியையும் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு தந்த சரித்திர நாயகன், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், அவர் வழி வந்த தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்கி, மாலுமியை இழந்த கப்பலாய், தலைவனை இழந்த குடும்பமாய், மாண்புமிகு

2019 ஜூலை 11]

அம்மா அவர்களை இழந்தபோது, இந்தக் கழகத்தை, இந்த ஆட்சியை நல்ல முறையில் நாங்கள் வழிநடத்திச் செல்கிறோம் என்று இந்த ஆட்சியையும், கழகத்தையும் வழிநடத்துகின்ற மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன்.

எங்கள் தொகுதியில் உள்ள வி. முத்தம்பட்டி என்ற மேல்நிலைப் பள்ளியில் ஏறக்குறைய 890 மாணவ-மாணவிகள் பயின்று வருகின்றனர். இவர்களின் போக்குவரத்திற்கு, பள்ளி நேரங்களில் செல்வதற்கு 2 பேருந்துகளை இயக்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், கிருஷ்ணராயபுரம் பள்ளியில் அதிக அளவில் மாணவ மாணவிகள் பயின்று வருகிறார்கள். இங்கு போக்குவரத்து வசதிகள் அதிகமாக உள்ளன. இருந்தாலும், அங்கு 960 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அந்தப் பள்ளி நேரங்களில் 2 பேருந்துகளை இயக்கித் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற அந்தப் பள்ளிகளில் மாணவர்களினுடைய எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கிறது. ஏற்கெனவே அந்த வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்று நினைக்கின்றேன். இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, தேவையிருக்குமாயின் அந்த வழித்தடத்திலே பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் வசமிருந்த பேருந்துகளையெல்லாம் அரசுடைமையாக்கி, ஏழைகளின் சொத்து போக்குவரத்துத் துறை என்பதை இந்தத் தமிழகத்திற்குக் காட்டியவர் மறைந்த தலைவர்*

[*2019 ஜூலை 11*

டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் மக்கள் தேவைக்கேற்ப போக்குவரத்து வசதியையும், பெரிய பேருந்துகள் கிராமங்களில், குக்கிராமங்களில் போக முடியாத ஊர்களில் சிறிய பேருந்து என்ற mini bus *திட்டத்தையும் இந்தியாவில் முதன்முதலில் அறிமுகப்படுத்தி, ஆயிரக்கணக்கான போக்குவரத்து வழித்தடங்களை உருவாக்கினார். நான் சார்ந்திருக்கிற தஞ்சாவூர் மாவட்டத்தில் 300-க்கும் மேற்பட்ட சிறிய பேருந்துகள்* (mini buses) *இயக்கப்பட்டன. ஆனால், கடந்த 8 ஆண்டுகளில் புதிய* mini bus *எதுவுமே தஞ்சாவூர் மாவட்டத்தில் இயக்கப்படவில்லை. எனவே, மக்கள் தேவையறிந்து கலைஞர் அரசு செய்ததைப்போல்,* mini bus-*ஐ இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இயக்கப்படுகின்ற அரசுப் பேருந்துகளே போதுமானதாக இருக்கின்றன. அவர்கள் ஆட்சிக் காலத்திலே கொண்டுவரப்பட்ட அந்த மினி பேருந்துகளிலே கிட்டத்தட்ட இதுவரை 1,500 பேருந்துகளுக்குமேல் இயக்க முடியாமல் நிறுத்தப்பட்டிருக்கின்றன. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். நிறுத்தப்பட்ட பேருந்துகளை யாராவது இயக்க வேண்டுமென்று சொன்னால் அதைக் கொடுப்பதற்குத் தயார். போக்குவரத்துக் கழகத்தில் இப்போதிருக்கக்கூடிய நிதி நெருக்கடி என்பது அனைவருக்குமே தெரியும். இந்தச் சூழ்நிலையில் மினி பேருந்துகள் என்பது இப்போதைக்கு தேவையில்லாத ஒன்று. ஏனென்று சொன்னால், இந்தியாவில் அனைத்து கிராமங்களுக்கும் பேருந்து வசதியைச் செய்து கொடுத்திருக்கக்கூடிய ஒரு மாநிலம் தமிழகம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புறங்களிலே இயக்கப்படக்கூடிய நகரப் பேருந்துகளில் பயணிகளுடைய அடர்வு மிகவும் குறைவாக இருக்கிறது. இருந்தபோதிலும், பள்ளிக்குச் செல்லக்கூடிய மாணவர்கள், பணிக்குச் செல்லக்கூடிய தொழிலாளர்களுடைய நலனைக் கருத்திலே கொண்டு அந்தப் பேருந்துகளைத் தொடர்ந்து அரசு இயக்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2019 ஜூலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. வே. சம்பத்குமார்: *வணங்கும் கைகள் விலகும் முன்னே வரம் தரும் எங்கள் அன்னையே! உங்கள் பாதங்களை வணங்குகிறேன். கேட்டவற்றையெல்லாம் கொடுக்கும் வள்ளலின் வாரிசே! தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களின் பாதங்களை வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, தருமபுரி மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக மாவட்டம் முழுவதும் தன்னுடைய கால்கள் பதிக்காத இடங்களே இல்லை என்ற அளவிற்கு கழகத்தையும், அரசையும் வழிநடத்திச் செல்கின்ற மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். என்னுடைய அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிட்லிங் மலை கிராமத்திலிருந்து பெங்களூருக்கு தொழிலாளர்கள் நெடுந்தூரம் செல்கின்ற நிலையில், ஆத்தூரிலிருந்து சிட்லிங், தீர்த்தமலை, பொய்யப்பட்டி, ஊத்தங்கரை வழியாக பெங்களூருக்கு ஒரு வழித்தடத்தை புதியதாக ஏற்படுத்திக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்களைப் பணிந்து வணங்கி வேண்டிக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற வழித்தடம் புதிய வழித்தடம்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *அந்த வழித்தடத்திலே பேருந்துகள் இயக்கப்படுகின்றனவா, அதில் பயணிகளினுடைய அடர்வு எவ்வளவு என்பதையெல்லாம் ஆராய்ந்து, தேவையிருக்குமாயின், அந்த வழித்தடத்தில் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, mini bus பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எதற்காக விடப்பட்டது என்று கேட்டால், கிராமங்களிலே, உட்பகுதியிலே பெரிய ரோடுகள் கிடையாது. இந்த பெரிய நீளமான வண்டிகள் உள்ளே சென்றால் திரும்ப முடியாது. ஆகையினால், மக்களை சௌகரியப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நாம் அந்தப் பேருந்துகளை விட்டோம். இலாபம் ஈட்ட வேண்டுமென்பதற்காக அல்ல. அரசாங்கம் எல்லாவற்றிலும் இலாப நோக்கம் பார்க்க முடியாது. ஒவ்வொரு department-ஐயும் எடுத்துப் பார்த்தோமென்றால், எத்தனையோ இலாகாக்கள் இலாப, நஷ்டத்தை சந்திக்கிறார்கள். மக்களுக்காகத்தான் சர்க்கார் அதனை ஏற்றுக்கொள்ளும். ஆகையினால், mini buses விடுவதன் நோக்கமே சிறிய சிறிய சந்துகள் மாதிரி இருக்கின்ற interior hamlets-ல் எல்லாம்கூட போக வேண்டும் என்பதற்காகத்தான் இதனை அனைத்துத் தரப்பு மக்களும் விரும்புகிறார்கள். ஆகையினால், mini bus விடுவதற்கு வேண்டிய அந்தக் கருத்தை மறுபடியும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, பள்ளி மாணவர்களுக்கு அந்த நேரத்திற்குத் தகுந்த மாதிரி பேருந்துகளை விட்டிருந்தீர்கள். தமிழ்நாடு முழுவதும் நிறுத்திவிட்டீர்கள். அந்த மாணவர்கள் சரியான நேரத்தில் பள்ளிகளுக்குச் சென்று, திரும்புகின்ற நேரம், இப்பொழுது எல்லாவற்றையும் நிறுத்திவிட்டீர்கள். அதைப்பற்றிக் கேட்டால் diesel-க்குப் பணம் போதவில்லை என்று சொல்கிறீர்கள். ஆகையினால், என்றைக்கும் நான் சொல்கிறேன் இந்த இலாகா ஜென்மத்தில் இலாபத்திற்கு வராது. இருக்கின்ற வரையில் ஒரு சேவை மனப்பான்மையோடு நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அனைத்து பேருந்துகளையும் நிறுத்திவிட்டதாகச்

2019 ஜூலை 11]

சொன்னார்கள். கிராமப்புறங்களில் இயக்கப்படக்கூடிய பேருந்துகள் நிறுத்தப்படவில்லை. ஏனென்று சொன்னால், அவை பள்ளி மாணவர்களுக்கு, அதேபோல பணிக்குச் செல்லக்கூடியவர்களுக்கு தேவையான காலை மற்றும் மாலை நேரங்களிலே தொடர்ந்து இயக்கப்பட்டுதான் வருகின்றன. எந்த இடத்திலும் பள்ளி செல்லக்கூடிய மாணவர்களுக்கு பேருந்து வசதி இல்லையென்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, உடனடியாக அந்த வழித்தடங்களிலே பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும். நீங்கள் சொன்ன mini பேருந்தை, unserved area, served area என்று பிரித்துக் கொடுத்திருக்கிறீர்கள். 30 சதவிகிதம் மட்டுமே served area-வில், அதாவது பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்ற வழித்தடங்களில் இயக்க வேண்டுமென்று அதில் ஒரு condition இருக்கிறது. ஆனால், இப்பொழுதிருக்கின்ற mini பேருந்துகள் எதையுமே அப்படியெல்லாம் ஓட்டுவதே கிடையாது. எல்லாமே bypass NH-ல் அரசு பேருந்துகளை இயக்கக்கூடிய வழித்தடங்களில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. முறையாக இருக்கக்கூடிய மினி பேருந்துகளை rule-ல் இருக்கின்ற மாதிரி served area-ல் மட்டும் unserved area-ல் இருக்கின்ற மாதிரி ஓட்ட வேண்டுமென்று சொன்னால், எந்த வண்டியையும் ஓட்டுவதே இல்லை. Private-ல் இருக்கின்றவர்கள் இலாப நோக்கத்திற்காகத்தான் ஓட்டுவார்கள். முடியாததினால்தான் அவர்கள் 1,500 permit-க்குமேல் இன்றைக்கு நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால், அரசு போக்குவரத்துக் கழகம் என்பது கிராமப் பகுதிகளிலே, எல்லாப் பகுதிகளையும், எல்லா ஊர்களையும் இணைக்கின்ற வகையிலே இயக்கப்பட்டது. நகரப் பகுதிகளிலேயும், புற நகரப் பகுதிகளிலேயும் பேருந்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல ஏதாவது பள்ளிகளுக்கு பேருந்து வசதிகள் இல்லையென்று சொன்னால், உடனடியாக அந்த வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, போக்குவரத்துக் கழகம் என்பது இலாப நோக்கத்திற்காக இயக்கப்படக்கூடியது அல்ல. இது சேவை மனப்பான்மையிலே இயக்கக்கூடியது. தொடர்ந்து உங்களுடைய

[2019 ஜூலை 11

ஆட்சியிலும் சரி, எங்களுடைய ஆட்சியிலும் சரி போக்குவரத்துக் கழகங்கள் எப்பொழுதுமே நிதி நெருக்கடியில் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. அவ்வப்பொழுது, அந்தந்தத் தேவைக்கேற்ப, அரசு நிதிகளைக் கொடுத்து, போக்குவரத்துக் கழகத்தினுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துக் கொண்டிருக்கிறது. எனவே, நிறுத்தப்பட்ட வழித்தடங்களிலே frequency ஆக இரண்டு நிமிடங்களுக்கு ஒரு பேருந்து இயக்கிக் கொண்டிருக்கின்ற வழித்தடங்களையெல்லாம் மறு ஆய்வு செய்து, அப்படிப்பட்ட பேருந்துகள் மட்டும்தான் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பார்க்கலாம். நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, என்ன என்பதை கேட்டு முடிவு சொல்கிறேன். (குறுக்கீடு) கேட்கிறேன், கேட்கிறேன். (குறுக்கீடு) கேட்டு சொல்கிறேன்.

3. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) கூவம், அடையாறு மற்றும் பக்கிங்காம் கால்வாய்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், கழிவுநீரை சுத்திகரித்து மறுசுழற்சி செய்தல் உள்ளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.